சுருக்கம்

பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் உச்ச வரம்பினை உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க – பேரூராட்சிகளில் நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (ப) எண்.213 **நாள்:23.06.2022**

சுபகிருது வருடம் ஆனி – 9

திருவள்ளுவர் ஆண்டு – 2053

படிக்கப்பட்டது::

1. அரசாணை (ப) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள்: 12.04.2008.

மீண்டும் படிக்க:

2. பேரூராட்சிகளின் ஆணையரின் கடித எண். 15653/2018/உ3 நாள்: 20.04.2022.

****

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளில் அண்மையில் நடந்த தேர்தலின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக 18.04.2022 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட உச்ச வரம்பினை உயர்த்தி வழங்கிட பேரூராட்சியின் தலைவர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி வழங்குமாறு அறிவித்துள்ளார். அதனடிப்படையில், கீழ்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி வழங்க ஆணையிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

Verified RealEstate

(ரூ.இலட்சத்தில்)

	தற்போது நடைமுறையில் உள்ளது		மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது	
	சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை	நிலை I மற்றும் நிலை II	சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை	நிலை I மற்றும் நிலை II
பேரூராட்சி மன்றம்	8.00	4.00	15.00	10.00
உதவி இயக்குநர்	20.00	20.00	30.00	
மாவட்ட ஆட்சியர்	30.00	30.00	50.00	

3. மேற்காணும் பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துரு அரசால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பேரூராட்சி மன்றம், மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் (மற்றும்) மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நிர்வாக அனுமதியின் உச்ச வரம்பினை தற்போது கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

	ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிர்வாக அனுமதியின் அதிகார உச்ச வரம்பு		தற்போது உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் நிர்வாக அனுமதியின் அதிகார உச்ச வரம்பு	
	சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை	நிலை I மற்றும் நிலை II	சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை	நிலை I மற்றும் நிலை II
பேரூராட்சி மன்றம்	8.00	4.00	15.00	10.00
உதவி இயக்குநர்	20.00	20.00	30.00	
மாவட்ட ஆட்சியர்	30.00	30.00	50.00	

4. மேலும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பேரூராட்சிகளின் ஆணையருக்கு நிர்வாக அனுமதி வழங்க நிர்ணயம் செய்யப்பட்ட உச்ச வரம்பில் மாற்றம் ஏதுமில்லை எனவும், கீழ்கண்ட அதிகார உச்ச வரம்பினையே பின்பற்றுமாறு அரசு அறிவுறுத்துகிறது.

நிர்வாக அனுமதி வழங்க அதிகார உச்ச வரம்பு

(ரூ.இலட்சத்தில்)

	சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை	நிலை I மற்றும் நிலை II
	அதிகார உச்ச வரம்பு	
பேரூராட்சிகளின் ஆணையர்	300.00	300.00
அரசு	300.00க்கு மேல்	300.00க்கு மேல்

Verified by PeopleStore

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 31542/ நிதி(நநி(ம)கு.வ/2022, நாள்: 23.06.2022–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சிவ் தாஸ் மீணா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை – 600 028.
சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை –600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி.2) துறை, சென்னை –600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

23/6/2022
பிரிவு அலுவலர்

23/06/22

Verified RealState TM

Verified RealEstate™